டிரினிடி மகளிர் கல்லூரி, நாமக்கல்-637002.

தமிழாய்வுத்துறை

2023-2024 ஆம் கல்வியாண்டு(ஒற்றைப்பருவம்)

*இளநிலை முதலாமாண்டு*

# பொதுத்தமிழ் (23UFTA01)


வழங்கியவர்

முனைவர்.நா.சுபலட்சுமி,

உதவிப்பேராசிரியர்,

தமிழாய்வுத்துறை.

http://www.trinitycollegenkl.edu.in/

முன்னுரை மேலை நாட்டாரின் தொடர்பால் இருபதாம் நூற்றாண்டில் கவிதை பற்றிப் புதிய கொள்கைகள் எழுந்தன. யாப்பு என்ற சட்டத்துக்குள் எழுந்த சலிப்பும் தேய்மானமும் புதுக்கவிதையின் தோற்றத்திற்கு வித்திட்டது.

பழையன கழிதலும் புதியன புகுதலும்

வழுவல கால வகையி னானே

என்ற நன்னூலாரின் கோட்பாட்டிற்கு ஏற்ப தமிழ் புதுக்கவிதை என்ற புது வடிவத்தை ஏற்றது.

- யாப்பு முறைகளுக்குக் கட்டுப்படாமல் கவிதை உணர்வுகளுக்குச் சுதந்தரமான எழுத்து உருவம் கொடுக்கும் படைப்பு எனப் புதுக்கவிதைக்கு வல்லிக்கண்ணன் விளக்கம் தருகின்றார்.

யாப்பில் அடைய முடியாத எல்லைகளை அடைவதற்கு நாம் பேசிக் கொண்டிருக்கும் வித்தியாசமான மொழி தான புதுக்கவிதைக்கு விளக்கம் தருகிறார்.

19 ஆம் நூற்றாண்டில் பிரெஞ்சு நாட்டில் வெர்சுலிப்ரே என்னும் பெயரில் புதுக்கவிதை இயக்கம் தோன்றலாயிற்று..

அமெரிக்காவில் இதனைத் தோற்றுவித்தவர் வால்ட்விட்மன் ஆவார்.விட்மனின் காலகட்டத்தில் குறியீட்டியல் கவிஞர்கள் தோன்றினர்.

மேனாட்டார் தொடங்கி வைத்த புதுக்கவிதை இயக்கம் வங்காளத்திலும் தமிழ்நாட்டிலும் கால்கொள்ளத் தொடங்கிற்று. தமிழ்கவிதைக்குப் பாரதியாரும் வங்காள கவிதைக்குத் தாகூரும் உலகளாவிய பார்வையை வழங்கினர். தமிழ்ப் புதுக்கவிதையின் தந்நையின் பாரதியாருக்குப் பிறகு புதுக்கவிதை முயற்சியில் ஆர்வத்துடன் ஈடுபட்டவர் ந.பிச்சமூர்த்தி ஆவார்.

மரபுக்கவிதையில் சொல்ல முடியாததைச் சொல்லமுடிவதும் நாம்வாழும் காலத்திற்கு ஏற்ப எழகின்றபிரச்சினைகளையும் பரந்துபட்ட வாழ்கை அனுபவங்களையும் வெளியிடுவதற்குச் சிறந்த சாதனம் புதுக்கவிதையாகும்.

புதுக்கவிதையின் பாடுபொருள்

காதல்

வேலைவாய்ப்பு

சம்பளஉயர்வு

வரதட்சணை

நிராசை

.

மணிக்கொடி இதழில் சிறுகதைகள் எழுதியவர்களில் புதுக்கவிதைத் துறையிலும் தங்கள் சோதனை முயற்சியை மேற்கொண்டனர்.

மணிக்கொடிக்கால இதழ்கள்

கிராம ஊழியன்

நவசக்தி

கலாமோகினி

சூறாவளி

மணிக்கொடியில் தொடங்கிய புதுக்கவிதை இயக்கம் எழுத்து இதழில் தொடர்ந்தது. 1959 முதல் 1970 வரை வெளிவந்த சி.சு.செல்லப்பாவின் எழுத்து இதழ் புதுக்கவிதையை நிலைநிறுத்திய சாதனையைச் செய்தது.

எழுத்து பரம்பரை இதழ்கள்

சரசுவதி

நடை

தீபம்

கணையாழி

தாமரை

1970- களில் கோவையிலிருந்து வெளிவந்த வானம்பாடி இதழ் புதுக்கவிதை வரலாற்றில் மற்றொரு குறிப்பிடத்தக்க இதழாகும்.

வுானம்பாடிக் கவிஞர்கள்

அப்துல்ரகுமான்

இன்குலாப்

கலாப்பிரியா

கங்கைக்கொண்டான்

நன்றி

**http://www.trinitycollegenkl.edu.in/**